1973 டிசம்பர் 3]

விதை தொழில் நுட்பவியலில் பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள்.

திரு வ. ஈஸ்வரமூர்த்தி (திரு எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், விதை தொழில் நுட்பவியலில் பட்ட மேற் படிப்புப் பாடமுறைகள் ஏதேனும் தொடங்கப்படவிருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனுர் : (அ) ஆம்.

(இ) 1973–74-ஆம் ஆண்டிலே எம். எஸ்ஸி. அக்ரிகல்ச்சர் மேல் பட்டப்படிப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. ஆறு மாணவர்கள் பயின்று வரு கிருர்கள்.

திரு எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, எம். எஸ்ஸி. அக்ரி கல்ச்சர் மதுரையிலே இருக்கின்ற விவசாயக் கல்லூரியிலும் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதா அல்லது கோயம்பத்தூர் விவசாயக் கல்லூரியில் மட்டும் செயல்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, 6 மாணவர் கள் என்று இருக்கிறது. எந்த ஊரில் எத்தனை மாணவர்கள் என்ற குறிப்பு என்னிடம் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

Strikes in Coimbatore Mills.

*188 *Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether any strikes have taken place in Coimbatore Mills run by Tamil Nadu Textiles Corporation during this month ; and

(*b*) if so, the duration of the strikes and the methods by which these strikes have been settled ?

கோவை பஞ்சாலைகளில் வேலை நிறுத்தங்கள்.

திரு காட்டூர் கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு ஜவுளி கார்ப்பரேஷன் ஏற்று நடத்துகிற கோவை பஞ்சாலைகளில் இந்த மாதத்தில் வேலை நிறுத்தங்கள் ஏதும் நடை பெற்றனவா ?

(இ) ஆமெனில், எவ்வளவு நாட்கள் நடைபெற்றன? எந்த வகையில் தீர்வு காணப்பட்டது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழ்நாடு ஜவுளி கார்ப்பரேஷன் ஏற்று நடத்துகிற கோவை பஞ்சாலைகளில் 1973 எப்ரல் மாதத்தில் வேலை நிறுத்தங்கள் ஏதும் நடைபெறவில்லை.

Labour Education Institute.

*189 *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the activities to be taken up under the auspices of the Labour Education Institute, recently opened at Nandambakkam, Madras; and

(*b*) whether there is any proposal with the Government to open such Institutes in the headquarters of the Districts of Coimbatore, Madurai and Tiruchirappalli?

தொழிலாளர் கல்வி நிலையம்.

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில், சென்னை நந்தம்பாக்கத்தில், திறந்து வைக்கப் பட்டுள்ள தொழிலாளர் கல்வி நிலையத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் யாவை?

(இ) இது போன்ற கல்வி நிலையங்களை கோவை, மதுரை, திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகரங்களிலும் ஏற்படுத்துகிற உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) தொழிற் சங்கத் தலைமையை உருவாக்குதல், தொழிலாளர் நல அதிகாரிகளுக்கும், பணியாளர் நிர்வாக அதிகாரிகளுக்கும் பயிற்சியளித்தல், துறை அதிகாரிகளுக்கு நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு தொழிலாளர் கல்வி நிலையத்தைத் (Institute of Labour Studies) தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

தொழிற் சங்கங்களுக்கு தொழிலாளர்களிடையேயிருந்து தலைமையை உருவாக்குவது குறித்து உரிய முக்கியத்துவம் அளித்து தற்போது செயலிலுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் பல்வேறு கூறுகள் குறித்து தொழிற் சங்கத் தலைவர்களுக்குத் தெரிவிக்கவும், தற்காலத்தில் தொழிலதிபர்—தொழிலாளர் உறவில் மாறுதல்கள் ஏற்பட்டு வருகிற போக்கைப் பற்றி அவர்கள் உணரச் செய்யவும் வேண்டி,